


கிட்டத்தட்ட எட்டு வருட காலத்துக்கும் மேலாக ஹம்பாலி ஆப்கனிஸ்தானில் இருந்தார்.

பொழுது விடிந்து பொழுது போனால் யுத்தம்தான். துப்பாக்கியால் பல் துலக்கி, பெட்ரோல் குண்டுகளை உடைத்துக் கொப்பளித்து வாழ்கிற வாழ்க்கை. உணவுக்கு உத்தரவாதம் கிடையாது. உயிருக்கு உத்தரவாதம் கிடையாது. சொந்த சந்தோஷம், சொந்த துக்கம் எதுவும் கிடையாது. யார் கூப்பிட்டார்கள்? சொந்தமாக ஆசைப்பட்டு, கப்பலேறி வந்து பங்கு பெற்ற யுத்தம். யுத்தத்தின் வெற்றி என்பது ஆப்கானியர்களுக்கு. ஹம்பாலிக்கும் மற்றவர்களுக்கும்?

உண்மையில், ஆப்கன் யுத்தத்தில் பங்கு கொள்ள வந்த யாரும் சொந்த லாபம் கருதி வந்தவர்கள் அல்லர். அது ஒரு வேகம். உணர்ச்சி வேகம். விடுதலை வேட்கை என்று கூடச் சொல்ல முடியாது. அடுத்த நாட்டு விடுதலைக்காக எத்தனை பேர் சொந்த நாட்டிலிருந்து புறப்பட்டுப் போவார்கள்? உலக சரித்திரத்திலேயே இதற்கு நிகராக இன்னொரு சம்பவம் கிடையாது.

ஆனால், ஆப்கன் யுத்தத்தால் ஹம்பாலி அடைந்த லாபம் என்று பார்த்தால், ஒரு முழுமையான போர் வீரனாக உருவானதைச் சொல்லலாம். எட்டாண்டு காலம் என்பது சாதாரணமல்ல. ஒசாமா பின்லேடன், ஆப்கன் முஜாஹிதீன் தலைவர்கள், பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. என்று, முத்தரப்புப் பயிற்சி வகுப்புகளில் அவர் தன்னைப் பட்டை தீட்டிக்கொண்டார். ஹம்பாலியால் உணவின்றி ஒரு மாத காலம் வாழமுடியும். தண்ணீர் குடிக்காமல் இரண்டு வாரங்கள் இருப்பார். இது உண்ணாவிரதம் இருப்பவரைப் போல் கட்டிலில் மெத்தை போட்டுப் படுத்துக் கொள்வதல்ல. உணவும் நீரும் இல்லாததற்கான பாதிப்புகளோ, பக்க விளைவுகளோ இல்லாமல், தொடர்ந்து தனது பணியில் அவரால் முழு உற்சாகத்துடன் ஈடுபட முடியும். இந்தக் கலையை அவருக்கு ஒசாமா பின்லேடன் கற்றுத் தந்ததாக ஒரு செய்தி உண்டு.

தவிரவும், உலகம் முழுவதும் முஸ்லிம் மக்கள் படுகிற துன்பங்களும் துயரங்களும் அவருக்கு அந்தக் காலகட்டத்தில்தான் அறிமுகமானது. தலைவர்களும் தளபதிகளும் ஓய்வு நேரத்தில் பேசுகிற விஷயம் அதுதான். ஹம்பாலி அத்தகைய பேச்சு வார்த்தைகளை மிகக் கவனமாக உற்று நோக்கி அலசி ஆராய்வார். தன் வாழ்க்கை ஜிஹாதுக்குத்தான் என்று தீர்மானம் செய்து கொண்டுதான் அவர் யுத்தத்துக்குப் பிறகு, இந்தோனேஷியா புறப்பட்டார்.

சரியாக அந்தச் சந்தர்ப்பத்தில் அபூபக்கர் பஷீர் அனுப்பிய குழு – குறிப்பாக, அந்தக் குழுவின் தலைமை ஏற்று வந்திருந்த அப்துல்லா சுங்கரின் பரிச்சயமும் நட்பும் ஏற்பட, ஹம்பாலிக்கு உண்மையிலேயே தனக்கான பாதையை இறைவனே தீர்மானித்து அனுப்பியிருப்பதாகத் தோன்றிவிட்டது.

உடனடியாக சுங்கரை ஒசாமா பின்லேடனுக்கும் பிற ஆப்கன் முஜாஹிதீன் தலைவர்களுக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார். கிழக்காசியாவில் ஒசாமா பின்லேடனுக்கு நம்பிக்கைக்குரிய ஒரு கூடாரமாக ஜமா இஸ்லாமியா விளங்கும் என்று சுங்கர் சொன்னது, பின்லேடனுக்கு மிகுந்த நம்பிக்கையும் திருப்தியும் அளித்தது. ஜமா இஸ்லாமியாவுக்கு எந்த உதவி வேண்டுமானாலும் தயங்காமல் கேட்கலாம் என்று அவர் ஹம்பாலியிடம் சொல்லி அனுப்பினார்.

கவனிக்கவும். ஒசாமா அப்போது அல் காயிதாவை உருவாக்கியிருக்கவில்லை. ஓர் உத்தேசம் மட்டுமே இருந்தது. அவர் உதவி என்று குறிப்பிட்டது, பண உதவிகளை. அதற்கென்ன? கோடி கோடியாகக் கொழித்த குடும்பத்தின் வாரிசல்லவா? அவரது தந்தை மறைந்து, குடும்பச் சொத்தாக அவருக்கு வந்தது மட்டுமே பல கோடிகளைத் தாண்டும். கவனமாக அந்தப் பணத்தைப் பல்வேறு வர்த்தக நிறுவனங்களில் முதலீடு செய்து, பணத்தைப் பெருக்கிக் கொண்டும் இருந்தார்.

எனவே, எந்த தேசத்தில் யார் ஓர் எதிர்ப்பு இயக்கத்தைத் தொடங்கினாலும் (முஸ்லிம்கள் மட்டும்) அவர்களுக்கு உதவத் தயார் என்பதை ஒரு மாட்டாத போர்டாகவே ஒசாமா அப்போது வைத்திருந்தார்.

சுங்கருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஹம்பாலியும் அவரது நண்பர்களும் ஜமா இஸ்லாமியாவில் இணைய ஒப்புக் கொண்டது ஒரு பக்கம்; எதிர்பாராமல் கிடைத்த ஒசாமா பின்லேடன் என்கிற பணக்கார ஜிஹாதியின் நட்பும் ஆதரவும் இன்னொரு பக்கம். போதாது? யதேஷ்டம்.

ஹம்பாலியும் சுங்கரும் ஊர் திரும்பும்முன் ஒசாமா ஹம்பாலியை மட்டும் தனியே அழைத்து, அவரையும் இன்னொரு இந்தோனேஷியப் போராளியான முஹம்மது இக்பால் ரெஹ்மான் என்கிற அபூ ஜிப்ரீல் என்பவரையும் மட்டும் தொடர்ந்து தன்னோடு தொடர்பில் இருக்கும்படி இன்னொரு முறையும் சொல்லி அனுப்பியதாக National Bureau of Asian Research என்கிற ஆசிய ஆராய்ச்சி அமைப்பு ஒன்று, வெளியிட்டிருக்கும் ஆய்வறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனால், இந்தோனேஷியக் காவல் துறை இந்த ஜமா இஸ்லாமியா - அல் காயிதா தொடர்பைத் தொடர்ந்து மறுத்து வந்திருக்கிறது. இது தொடர்பாக வெளியாகிற தகவல்கள் அனைத்தும் முழுக்கற்பனை என்றும் ஜமாவுக்கு அல் காயிதா தொடர்பு இருக்க சாத்தியமே இல்லை என்றும் இந்தோனேஷியக் காவல் துறைத் தலைவர்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் கூறி வந்திருக்கிறார்கள். ஆனால், அதற்கான வலுவான ஆதாரங்கள் எதையும் அவர்கள் சமர்ப்பித்ததாகத் தெரியவில்லை.

அவர்கள் சுட்டிக் காட்டும் ஒரே ஆதாரம் இதுதான். அல் காயிதாவுக்கு உலகு தழுவிய நோக்கம் இருக்கிறது. ஜமா இஸ்லாமியாவுக்கு அப்படி எதுவும் இல்லை. அவர்கள் செயல்படுவது முழுக்க முழுக்கப் பிராந்திய ரீதியிலான பிரச்னைகளை முன்வைத்தே. அல் காயிதாவுக்கும் ஜமா இஸ்லாமியாவுக்கும் இடையே உள்ள இந்த அடிப்படை வேறுபாடு ஒன்றே இதற்கு சாட்சி. இரண்டு இயக்கங்களுக்கும் தொடர்பு ஏதும் இருக்க வாய்ப்பே இல்லை.

இந்தோனேஷிய போலீஸ் சொல்வதை யார் கேட்டார்கள்? அமெரிக்கா உள்பட எந்த தேசமும் இதனை ஏற்கவில்லை. ஹம்பாலிக்கும் ஒசாமாவுக்கும் இருந்த, இருக்கிற நெருக்கம் பற்றி கோடி அறிக்கைகள் எழுதப்பட்டிருக்கின்றன. அது க்ளோசப்பின் நேசப்பிணைப்பு என்று அல் காயிதாவின் இரண்டாம் நிலைத் தலைவரான ஐமன் அல் ஜவாஹிரியே ஒருமுறை சொல்லியிருக்கிறார்.

இருக்கட்டும். அதுவல்ல முக்கியம். ஹம்பாலியும் அவரது இந்தோனேஷியத் தோழர்கள் பலரும், அல் காயிதாவின் கௌரவ உறுப்பினர்களாகவே இருக்கிறார்கள் என்றொரு கருத்தும் உண்டு. இதனை இரு தரப்பும் உறுதிப்படுத்தியதில்லையே தவிர, யாரும் மறுத்ததும் இல்லை. கிழக்காசிய நாடுகளில் அல் காயிதா சார்பில் நிகழ்த்தப்பட்ட பல காரியங்கள் (பின்னால் வரும்) ஜமா இஸ்லாமியாவின் ஒத்துழைப்புடனேயே செய்து முடிக்கப்பட்டன என்று ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, இதனை நம்பித்தான் ஆகவேண்டியுள்ளது.

அவ்வளவு ஏன்? இப்போது அமெரிக்காவின் கைதியாக க்யூபாவில் சிறை வைக்கப்பட்டிருக்கும் ஹம்பாலி, தன்னுடைய வாக்குமூலம் ஒன்றில், பாலி குண்டு வெடிப்புச் சம்பவத்தின் வெற்றியைப்

பாராட்டி ஒசாமா பின்லேடன் ஒரு லட்சம் டாலர் அன்பளிப்பு அனுப்பியதாகச் சொல்லியிருக்கிறார். இதை இல்லை என்று யாரும் மறுக்கவில்லை.

எப்படிப் பார்த்தாலும் ஜமா இஸ்லாமியாவுக்கு அல் காயிதா தொடர்பு உருவாக ஹம்பாலி ஒரு முக்கியக் காரணமாக இருந்திருக்கிறார் என்பதை ஒப்புக் கொண்டுதான் தீரவேண்டும். ஒப்புக் கொண்ட பிறகு, இப்போது ஹம்பாலியுடன் நாமும் மலேசியா போகவேண்டும். ஆப்கனிஸ்தானிலிருந்து புறப்பட்டதும் அவர் நேரே போன தேசம் அதுதான்.

அவர் அபூபக்கர் பஷீரைச் சந்தித்தது, நோரல்விஷா லீ அப்துல்லா என்கிற பெண்ணைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டது எல்லாம் அங்கேதான்.

அது கண்டதும் காதலா அல்லது நின்று நிதானமாக வந்த காதலா என்று தெரியவில்லை. ஆனால் காதலித்தார்கள். ஹம்பாலியைப் போலவே தீவிர மதப்பற்று. இஸ்லாத்துக்காக ஏதாவது உருப்படியாகச் செய்ய முடியுமா என்ற உந்துதல். இருவரையும் இணைத்து வைத்த புள்ளி இதுதான். ஒரு மதப்பள்ளியில் வைத்து இருவரும் சந்தித்துக் கொண்டார்கள். ஒருவருக்கும் தெரியப்படுத்தாமல் மிக ரகசியமாக நடந்தது திருமணம்.

குடும்பம், பிள்ளை குட்டி என்று சமர்த்தாக வீட்டோடு இருக்க விரும்பிய ஜோடி அல்ல அது. திருமணத்துக்குப் பிறகு, முன்னிலும் வேகமாகச் செயல்படவே ஹம்பாலி விரும்பினார். அவரது மனைவியும் அதற்கு ஒத்துழைத்தார். ஜமா இஸ்லாமியாவின் தளபதியாக நியமிக்கப்பட்டிருந்த ஹம்பாலி, இயக்கத்தை வலுவானதாக்கத் தம்மாலான அனைத்து முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருந்தார்.

தனித்தனி துறைகள். பொதுத்துறை, தகவல் தொடர்புத் துறை, நிதித்துறை, பாதுகாப்புத் துறை, இத்யாதிகள். ஒவ்வொரு துறைக்கும் தனித்தனித் தலைவர்கள். அவருக்குக் கீழே சூப்பர்வைஸர்கள். பிறகு, செயல்வீரர்கள்.

தலைவர்களுக்கு வருடாந்திர டார்கெட், மாதாந்திர டார்கெட் எல்லாம் உண்டு. கண்டிப்பாக நிறைவேற்றியே ஆகவேண்டும். இந்த வருடத்துக்குள் அல்லது இந்த மாதத்துக்குள் இன்னின்ன வேலைகளைச் சாதிக்கப் போகிறேன் என்று முன்கூட்டியே தெளிவுபடுத்திவிட வேண்டும். சொன்னதை முறைப்படி செய்து முடிக்க வேண்டும். தவறினால், கடும் தண்டனைகள் உண்டு.

இருப்பதிலேயே முக்கியமான பணி, இயக்கத்தில் புதிதாகச் சேரும் இளைஞர்களுக்குப் பயிற்சியளிப்பது. தேர்ந்தெடுக்கப்படுபவர்களைப் பொதுவாக ஆப்கனிஸ்தானுக்கு அனுப்புவது வழக்கம். அவர்கள் அங்கே சரியாகப் பயிற்சி எடுத்துக் கொள்கிறார்களா, இயக்கத்தின் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறார்களா என்று கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றி கவனிக்க ஒரு தனிக் குழு ஜமா இஸ்லாமியாவில் உண்டு. இந்தக் குழுவின் கிளை அலுவலகம் ஆப்கனிஸ்தானில் இன்றும் செயல்படுகிறது என்று சொல்கிறார்கள்.

பிறகு, தகவல் தொடர்பு. இயக்கத் தலைவர்களிடமோ அல்லது அவர்களுக்குக் கீழே பணிபுரியும் ஏதாவது ஒரு நபரையோ தொடர்பு கொள்ள வேண்டுமென்றால், இவர்கள் உதவிக்கு வருவார்கள். ஆப்கனிஸ்தான், பாகிஸ்தான், மலேஷியா என்று கிரிக்கெட் டீம் போல் சதா சர்வ காலமும் சுற்றியலைந்து கொண்டிருக்கும் இயக்கத்தினர் அத்தனை பேரையும் தகவல் தொடர்புத் துறை, ஒரே புள்ளியில் இணைத்துவிடும். ஜமா இஸ்லாமியாவின் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் என்று இதனை அழைக்கலாம். தகவல் பரிமாற்றத்தோடு முடங்கிவிடாமல், இயக்கத்துக்கான பிரத்தியேக வெப்சைட் ஒன்றை நடத்துவதும் இவர்கள்தாம்.

ஜமா இஸ்லாமியாவுக்கு மான்டிகி 1 (Mantiqi 1) என்னும் பெயரில் மலேஷியாவில் ஒரு தனிப் பிரிவு உண்டு. ஒசாமா பின் லேடனுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதுதான் இந்தப்

பிரிவினரின் முக்கியப் பணி. தவிரவும், தேவைப்படும் ஆயுதங்களை பேரம் பேசி வாங்கும் பொறுப்பும் இவர்களுடையதுதான்.

மான்டிகி 1 பிரிவில் இருப்பவர்கள்தான் பொதுவாக இயக்கத்துக்கு ஆள்கள் சேர்ப்பார்கள். யாரைத் தேர்ந்தெடுக்கலாம், யார் வேண்டாம் என்று முடிவெடுக்கும் அதிகாரம், இவர்களுக்கு மட்டுமே உண்டு. குறிப்பாக, இரண்டு மதரஸாக்கள் உள்ளன. இத்தனை பேர் தேவை என்று போன் செய்து சொல்லி விட்டால் போதும். அனுப்பி விடுவார்கள்.

இயக்கத்தின் நோக்கத்தை மக்களிடம் எடுத்துச் சொல்லி, அவர்களது ஆதரவைப் பெறுவதற்குப் பிரத்தியேகக் குழுக்களைத் தனியே உருவாக்கினார் ஹம்பாலி. ஆதரவு என்ன பெரிய ஆதரவு? தாராளமாக நன்கொடை கொடுத்தால் போதுமானது. சமர்த்தாகக் கைகளைக் கட்டிக் கொண்டு பேசினார்கள். 'நண்பா, இஸ்லாமிய சகோதரர்களின் துயர் துடைக்கப் பாடுபடுகிறோம், உன்னால் முடிந்ததைத் தா.' யார் எவ்வளவு கொடுத்தாலும் இன்முகத்துடன் வாங்கிக் கொள்வார்கள். பேரம் கிடையாது. மிரட்டல் கிடையாது.

யாசித்துப் பெரும் பணத்தைக் கொண்டு பெரிய லட்சியங்களை எல்லாம் அடைந்துவிட முடியாது என்கிறபடியால், பிசினஸில் இறங்க முடிவு செய்தது ஜமா இஸ்லாமியா.

கவனிக்கவும். இதுவும் அச்சு அசல் ஒசாமா ஸ்டைல். தன்னிடம் இருந்த பணத்தை விருத்தி செய்ய, உலகமெங்கும் முதலீடு என்கிற திட்டத்தைத் தொடங்கினார் ஒசாமா. பல்வேறு இஸ்லாமிய நாடுகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் விதமாக, பல்வேறு பினாமி பெயர்களில் அல் காயிதா பல வர்த்தக நிறுவனங்களைத் தொடங்கி வெற்றிகரமாக நடத்தியது போலவே, ஜமா இஸ்லாமியாவும் செய்யத் தொடங்கியது. சம்பளம், செலவினங்கள், நடத்துபவர்களுக்கான ஒப்புக்கொண்ட லாபம் நீங்கலாக, எஞ்சிய தொகை முழுவதும் இயக்கத்துக்கு வந்துவிடும்.

ஒரு விஷயம். அல் காயிதாவுக்கு அதன் பினாமி பிசினஸ்கள் பல சந்தர்ப்பங்களில் காலை வாரி விட்டிருக்கின்றன. ஆனால், ஜமா இஸ்லாமியா இந்த விஷயத்தில் படுகெட்டி. ஒரு பிசினஸ் கூடச் சோடை போனதில்லை, கடத்தல் பிசினஸ் உள்பட.